உ

வேலுமயிலுந் துணை

# கந்தரலங்காரம் : :

# : : கந்தரநுபூதி

அருணகிரிநாதர் அருளிச்செய்தன



அல்லயன்ஸ் கம்பெனி,

—— மயிலாப்பூர், சென்னை ——

காபிரைட்]

[விலை அணா 3

அல்லயன்ஸ் : : :

: : பஞ்ச ரத்தினங்கள்

1. ஷண்முக விஜயம்
2. நால்வர் சரித்திரம்
3. ஸ்ரீ பால ராமாயணம்
4. ஸ்ரீ பால பாரதம்
5. ஸ்ரீ பால பாகவதம்

PRINTED AT THE B. N. PRESS, MADRAS.



ஸ்ரீ ஷண்முகக கடவுள்

# கந்தரலங்காரம்

காப்பு

அடலரு ணைத்திருக் கோபுரத்
தேயந்த வாயிலுக்கு
வடவரு கிற்சென்று கண்டுகொண்
டேன்வரு வார்தலையிற்
றடப டெனப்படு குட்டுடன்
சர்க்கரை மொக்கியகைக்
கடதட கும்பக் களிற்றுக்
கிளைய களிற்றினையே.

## முருகன் பெருமையும், திறலும் கருணையும்

திருந்தப் புவனங்க ளீன்றபொற்
பாவை திருமுலைப்பா
லருந்திச் சரவணப் பூந்தொட்டி
லேறி யறுவர்கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச்
சூரழ விம்மியழுங்
குழந்தைக் குறிஞ்சிக் கிழவனென்
றோதுங் குவலயமே. (1)

ஒருவரைப் பங்கி னுடையாள்
குமார னுடை மணிசேர்
திருவரைக் கிங்கிணி யோசை
படத்திடுக் கிட்டரக்கர்
வெருவரத் திக்குச் செவிடுபட்
டெட்டுவெற் புங்கனகப்
பருவரைக் குன்று மதிர்ந்தன
தேவர் பயங்கெட்டதே. (2)

மொய்தா ரணிகுழல் வள்ளியை
வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப்
போன்வெய்ய வாரணம்போற்
கைதா னிருப துடையான்
றலைபத்துங் கத்தரிக்க
வெய்தான் மருக னுமையாள்
பயந்த விலஞ்சியமே. (3)

நாளென் செயும்வினை தானென்
செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென்
செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன்
னேவந்து தோன்றிடினே. (4)

நெற்றாப் பசுங்கதிர்ச் செவ்வேனல்
காக்கின்ற நீலவள்ளி
முற்றாத் தனத்திற் கினிய
பிரானிக்கு முல்லையுடன்
பற்றாக் கையும்வெந்து சங்க்ராம
வேலும் படவிழியாற்
செற்றார்க் கினியவன் தேவேந்த்ர
லோக சிகாமணியே. (5)

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கண் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு
நாமங்கண் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்
கோடன் மயூரமுமே. (6)

தேங்கிய வண்டத் திமையோர்
சிறைவிடச் சிற்றடிக்கே
பூங்கழல் கட்டும் பெருமாள்
கலாபப் புரவிமிசை
தாங்கி நடப்ப முறிந்தது
சூரன் றளந்தனிவேல்
வாங்கி யனுப்பிடக் குன்றங்க
ளெட்டும் வழிவிட்டவே. (7)

மண்கம ழுந்தித் திருமால்
வலம்புரி யோசையந்த
விண்கமழ் சோலையும் வாவியுங்
கேட்டது வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும்
பிள்ளை திருவரையிற்
கிண்கிணி யோசை பதினா
லுலகமுங் கேட்டதுவே. (8)

நாம விசேடம்

முடியாப் பிறவிக் கடலிற்
புகார்முழு துங்கெடுக்கு
மிடியாற் படியில் விதனப்
படார்வெற்றி வேற்பெருமா
ளடியார்க்கு நல்ல பெருமா
ளவுணர் குலமடங்கப்
பொடியாக கியபெரு மாதிரு
நாமம் புகல்பவரே. (9)

வேல்

தேரணி யிட்டுப் புரமெரித்
தான்மகன் செங்கையில்வேற்
கூரணி யிட்டணு வாகிக்
கிரௌஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த
கடக நெளிந்ததுசூர்ப்
பேரணி கெட்டது தேவேந்த்ர
லோகம் பிழைத்ததுவே. (10)

ஆலுக் கணிகலம் வெண்டலை
மாலை யகிலமுண்ட
மாலுக் கணிகலந் தண்ணந்
துழாய்மயி லேறுமையன்
காலுக் கணிகலம் வானோர்
முடியுங் கடம்புங்கையில்
வேலுக் கணிகலம் வேலையுஞ்
சூரனு மேருவுமே. (11)

மயில்

குசைநெகி ழாவெற்றி வேலோ
னவுணர் குடர்குழம்பக்
கசையிடு வாசி விசைகொண்ட
வாகனப் பீலியின்கொத்
தசைபடு கால்பட் டசைந்தது
மேரு வடியிடவெண்
டிசைவரை தூள்பட்ட வத்தூளின்
வாரி திடர்பட்டதே. (12)

தடக்கொற்ற வேண்மயி லேயிடர்
தீரத் தனிவிடினீ
வடக்கிற் கிரிக்கப் புறத்துநின்
றோகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்துங் கதிர்க்கப்
புறத்துங் கனகசக்ரத்
திடர்க்கப் புறத்துந் திசைக்கப்
புறத்துந் திரிகுவையே. (13)

சேலிற் றிகழ்வயற் செங்கோடை
வெற்பன் செழுங்கலபி
ஆலித் தனந்தன் பணாமுடி
தாக்க வதிர்ந்ததிர்ந்து
காலிற் கிடப்பன மாணிக்க
ராசியுங் காசினியைப்
பாலிக்கு மாயனுஞ் சக்கரா
யுதமும் பணிலமுமே (14)

## சேவல்

படைபட்ட வேலவன் பால்வந்த
வாகைப் பதாகையென்னுந்
தடைபட்ட சேவல் சிறகடிக்
கொள்ளச் சலதிகிழிந்
துடைபட்ட தண்ட கடாக
முதிர்ந்த துடுபடலை
யிடைபட்ட குன்றமு மாமேரு
வெற்பு மிடிபட்டவே. (15)

## நெஞ்சோடு கிளத்தல்

வேதா கமசித்ர வேலா
யுதன்வெட்சி பூத்ததண்டைப்
பாதார விந்த மரணாக
வல்லும் பகலுமில்லாச்
சூதான தற்ற வெளிக்கே
யொளித்துச்சும் மாவிருக்கப்
போதா யினிமன மேதெரி
யாதொரு பூதர்க்குமே. (16)

பாலென் பதுமொழி பஞ்சென்
பதபதம் பாவையர்கண்
சேலென் பதாகத் திரிகின்ற
நீசெந்தி லோன்றிருக்கை
வேலென் கிலைகொற் றமயூர
மென்கிலைவெட் சித்தண்டைக்
காலென் கிலைமன மேயெங்ங
னேமுத்தி காண்பதுவே. (17)

சுழித்தோடு மாற்றிற் பெருக்கா
னதுசெல்வந் துன்பமின்பங்
கழித்தோடு கின்றதெக் காலநெஞ்
சேகரிக் கோட்டுமுத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோட
னென்கிலை குன்றமெட்டுங்
கிழித்தோடு வேலென் கிலையெங்ங
னேமுத்தி கிட்டுவதே. (18)

சூரிற் கிரியிற் கதிர்வே
லெறிந்தவன் றொண்டர்குழாஞ்
சாரிற் கதியன்றி வேறிலை
காண்டண்டு தாவடிபோய்த்
தேரிற் கரியிற் பரியிற்
றிரிபவர் செல்வமெல்லா
நீரிற் பொறியென் றறியாத
பாவி நெடுநெஞ்சமே. (19)

படிக்கின் றிலைபழ நித்திரு
நாமம் படிப்பவர்தாண்
முடிக்கின் றிலைமுரு காவென்
கிலைமுசி யாமலிட்டு
மிடிக்கின் றிலைபர மானந்த
மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச
மேது நமக்கினியே. (20)

சேல்வாங்கு கண்ணியர் வண்ணப்
பயோதரஞ் சேரவெண்ணி
மால்வாங்கி யேங்கி மயங்காமல்
வெள்ளி மலையெனவே
கால்வாங்கி நிற்குங் களிற்றான்
கிழத்தி கழுத்திற்கட்டு
நூல்வாங்கி டாதன்று வேல்வாங்கி
பூங்கழ னோக்குநெஞ்சே. (21)

தெள்ளிய வேனலிற் கிள்ளையைக்
கள்ளச் சிறுமியெனும்
வள்ளியை வேட்டவன் றாள்வேட்
டிலைசிறு வள்ளைதள்ளித்
துள்ளிய கெண்டையைத் தொண்டையைத்
தோதகச் சொல்லைநல்ல
வெள்ளிய நித்தில வித்தார
மூரலை வேட்டநெஞ்சே. (22)

## தன்குறை கூறல்

ஓரவொட் டாரொன்றை யுன்னவொட்
டார்மல ரிட்டுனதாள்
சேரவொட் டாரைவர் செய்வதென்
யான்சென்று தேவருய்யச்
சோரநிட் டூரனைச் சூரனைக்
காருடல் சோரிகக்கக்
கூரகட் டாரியிட் டோரிமைப்
போதினிற் கொன்றவனே. (23)

சிணங்காட்டுங் கொட்டிலை விட்டொரு
வீடெய்தி நிற்கநிற்குங்
குணங்காட்டி யாண்ட குருதே
சிகனங் குறச்சிறுமான்
பணங்காட்டு மல்குற் குருகுங்
குமரன் பதாம்புயத்தை
வணங்காத் தலைவந் திதெங்கே
யெனக்கிங்ஙன் வாய்த்ததுவே. (24)

கவியாற் கடலடைத் தோன்மரு
கோனைக் கணபணக்கட்
செவியாற் பணியணி கோமான்
மகனைத் திறலரக்கர்
புவியார்ப் பெழத்தொட்ட போர்வேன்
முருகனைப் போற்றியன்பாற்
குவியாக் கரங்கள்வந் தெங்கே
யெனக்கிங்ஙன் கூடியவே. (25)

புத்தியை வாங்கிநின் பாதாம
புயத்திற் புகட்டியன்பாய்
முத்தியை வாங்க வறிகின்றி
லேன்முது சூர்நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ
குவடு தவிடுபடக்
குத்திய காங்கேய னேவினை
யேற்கென குறித்தனையே. (26)

சாகைக்கு மீண்டு பிறக்கைக்கு
மன்றித் தளர்ந்தவர்க்கொன்
றீகைக் கெனைவிதித் தாயிலை
யேயிலங் காபுரிக்குப்
போகைக்கு நீவழி காட்டென்று
போய்க்கடல் தீக்கொளுந்த
வாகைச் சிலைவளைத் தோன்மரு
காமயில் வாகனனே. (27)

சிந்திக்கி லேனின்று சேவிக்கி
லேன்றண்டைச் சிற்றடியை
வந்திக்கி லேனொன்றும் வாழ்த்துகி
லேன்மயில் வாகனனைச்
சந்திக்கி லேன்பொய்யை நிந்திக்கி
லேனுண்மை சாதிக்கிலேன்
புந்திக்கி லேசமுங் காயக்கி
லேசமும் போக்குதற்கே. (28)

பெறுதற் கரிய பிறவியைப்
பெற்றுநின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற்
றிலேன்மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட்சங் க்ராம
சயில சரசவல்லி
இறுகத் தழுவுங் கடகா
சலபன் னிருபுயனே. (29)

கோடாத வேதனுக் கியான்செய்த
குற்றமென் குன்றெறிந்த
தாடாள னேதென் றணிகைக்
குமரநின் றண்டையந்தாள்
சூடாத சென்னியு நாடாத
கண்ணுந் தொழாத கையும்
பாடாத நாவு மெனக்கே
தெரிந்து படைத்தனனே. (30)

## கதியின்மை கூறல்

தோலாற் சுவர்வைத்து நாலாறு
காலிற் சுமத்தியிரு
காலா லெழுப்பி வளைமுது
கோட்டிக்கை நாற்றிநரம்
பாலார்க்கை யிட்டுத் தசைகொண்டு
மேய்ந்த வகம்பிரிந்தால்
வேலாற் கிரிதுளைத் தோனிரு
தாளன்றி வேறில்லையே. (31)

மைவருங் கண்டத்தர் மைந்தகந்
தாவென்று வாழ்த்துமிந்தக்
கைவருந் தொண்டன்றி மற்றறி
யேன்கற்ற கல்வியும்போய்ப்
பைவருங் கேளும் பதியுங்
கதறப் பழகிநிற்கு
மைவருங் கைவிட்டு மெய்விடும்
போதுன் னடைக்கலமே. (32)

கதிதனை யொன்றையுங் காண்கின்றி
லேன்கந்த வேன்முருகா
நதிதனை யன்னபொய் வாழ்விலன்
பாய்நரம் பாற்பொதிந்த
பொதிதனை யுங்கொண்டு திண்டாடு
மாறெனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந் திங்கேயென்
றன்மனம் வேகின்றதே. (33)

## தன்னுறுதி கூறல்

கண்டுண்ட சொல்லியர் மெல்லியர்
காமக் கலவிக்கள்ளை
மொண்டுண் டயர்கினும் வேன்மற
வேன்முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடுடு டுடு
டுடுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண் டெனக்கொட்டி யாடவெஞ்
சூர்க்கொன்ற ராவுத்தனே. (34)

## பிரார்த்தனைப் பதிகங்கள்.

களத்திற் பிணிபட் டசட்டுக்
ரியைக்குட் டவிக்குமென்ற
னுளத்திற் ப்ரமத்தைத் தவிர்ப்பா
யவுண ருரத்துதிரக்
குளத்திற் குதித்துக் குளித்துக்
களித்துக் குடித்துவெற்றிக்
களத்திற் செருக்கிக் கழுதாட
வேலெறிந்த காவலனே. (35)

குப்பாச வாழ்க்கையுட் கூத்தாடு
மைவரிற் கொட்படைந்த
இப்பாச நெஞ்சினை யீடேற்று
வாயிரு நான்குவெற்பு
மப்பாதி யாய்விழ மேருங்
குலுங்கவிண் ணாருமுய்யச்
சப்பாணி கொட்டிய கையா
றிரண்டுடைச் சண்முகனே. (36)

தெய்வத் திருமலைச் செங்கோட்டில்
வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவ
னேமற வேனுனைநா
னைவர்க் கிடம்பெறக் காலிரண்
டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன்
னேவந்து காத்தருளே. (37)

பொக்கக் குடிலிற் புகுதா
வகைப்புண்ட ரீகத்தினுஞ்
செக்கச் சிவந்த கழல்வீடு
தந்தருள் சிந்துவெந்து
கொக்குத் தறிபட் டெறிபட்
டுதிரங் குமுகுமெனக்
கக்கக் கிரியுரு வக்கதிர்
வேறொட்ட காவலனே. (38)

கிளைத்துப் புறப்பட்ட சூர்மார்
புடன்கிரி யூடுருவத்
துளைத்துப புறப்பட்ட வேற்கந்த
னே துறந் தோருளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்கப்
பதைக்க வதைக்குங்கண் ணார்க்
கிளைத்துத் தவிக்கின்ற வென்னையெந்
நாள்வந் திரட்சிப்பையே. (39)

பொட்டாக வெற்பைப் பொருதகந்
தாதப்பிப் போனதொன்றற்
கெட்டாத ஞான கலைதரு
வாயிருங் காமவிடாய்ப்
பட்டா ருயிரைத் திருகிப்
பருகிப் பசிதணிக்குங்
கட்டாரி வேல்விழி யார்வலைக்
கேமனங் கட்டுண்டதே. (40)

பத்தித் துறையிழிந் தானந்த
வாரி படிவதினான்
புத்தித் தரங்கந் தெளிவதென்
றோபொங்கு வெங்குருதி
மெத்திக் குதிகொள்ள வெஞ்சூ
ரனைவிட்ட சுட்டியிலே
குத்தித் தரங்கொண் டமரா
வதிகொண்ட கொற்றவனே. (41)

உதித்தாங் குழல்வதுஞ் சாவதுந்
தீர்த்தெனை யுன்னிலொன் றா
விதித்தாண் டருடருங் காலமுண்
டோவெற்பு நட்டுரக
பதித்தாம்பு வாங்கிநின் றம்பரம்
பம்பரம் பட்டுழல
மதித்தான் றிருமரு காமயி
லேறிய மாணிக்கமே. (42)

பாலே யனைய மொழியார்த
மின்பத்தைப் பற்றியென்று
மாலேகொண் டுய்யும் வகையறி
யேன்மலர்த் தாடருவாய்
காலே மிகவுண்டு காலே
யிலாத கணபணத்தின்
மேலே துயில்கொள்ளு மாலோன்
மருகசெவ் வேலவனே. (43)

நீயான ஞான விநோதந்
தனையென்று நீயருள்வாய்
சேயான வேற்கந்த னேசெந்தி
லாய்சித்ர மாதரல்குற்
றோயா வுருகிப் பருகிப்
பெருகித் துவளு நிந்த
மாயா விநோத மனோதுக்க
மானது மாய்வதற்கே. (44)

படிக்குந் திருப்புகழ் போற்றுவன்
கூற்றுவன் பாசத்தினாற்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்சலென்
பாய்பெரும் பாம்பினின்று
நடிக்கும் பிரான்மரு காகொடுஞ்
சூர னடுங்கவெற்பை
இடிக்குங் கலாபத தனிமயி
லேறு மிராவுத்தனே. (45)

சிகராத்ரி கூறிட்ட வேலுஞ்செஞ்
சேவலுஞ் செந்தமிழாற்
பகரார்வ மீபணி பாசசங்
க்ராம பணாமகுட
நிகராட் சமபட்ச பட்சி
துரங்க ந்ருபகுமாரா
குகராட் சசபட்ச விட்சோப
தீர குணதுங்கனே. (46)

வெட்டுங் கடாமிசைத் தோன்றும
வெங்கூற்றன் விடுங்கயிற்றாற்
கட்டும் பொழுது விடுவிக்க
வேண்டுங் கராசலங்க
ளெட்டுங் குலகிரி யெட்டும்விட்
டோடவெட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்குங்
கலாப மயூரத்தனே. (47)

பருகாடு மங்கையர் செங்கயற்
பார்வையிற் பட்டுழலுஞ்
சிந்தா குலந்தனைத் தீர்த்தருள்
வாய்செய்ய வேன்முருகா
கொந்தார் கடம்பு புடைசூழ்
திருத்தணிக் குன்றினிற்குங்
கந்தா விளங்கும ராவம
ராவதி காவலனே. (48)

பாகத்தை முட்டி வருநெடுங்
கூற்றன்வந் தாலென்முன்னே
தோகைப் புரவியிற் றோன்றிநிற்
பாய்சுத்த நித்தமுத்தித்
த்யாகப் பொருப்பைத் த்ரிபுராந்
தகனைத் த்ரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரமகல்
யாணிதன் பாலகனே. (49)

தகட்டிற் சிவந்த கடம்பையு
நெஞ்சையுந் தாளிணைக்கே
புகட்டிப் பணியப் பணித்தரு
ளாய்புண்ட ரீகனண்ட
முகட்டைப் பிளந்து வளர்ந்திந்த்ர
லோகத்தை முட்டவெட்டிப்
பகட்டிற் பொருதிட்ட நிட்டூர
சூர பயங்கரனே. (50)

வணங்கித் துதிக்க வறியா
மனித ருடனிணங்கிக்
குணங்கெட்ட துட்டனை யீடேற்று
வாய்கொடி யுங்கழுகும்
பிணங்கத் துணங்கை யலகைகொண்
டாடப் பிசிதர்தம்வாய்
நிணங்கக்க விக்ரம வேலாயு
தந்தொட்ட நிர்மலனே. (51)

தொண்டர்கண் டண்டிமொண் டுண்டிருக்
குஞ்சுத்த ஞானமெனுந்
தண்டையம் புண்டரி கந்தரு
வாய்சண்ட தண்டவெஞ்சூர்
மண்டலங் கொண்டுபண் டண்டரண்
டங்கொண்டு மண்டி மிண்டக்
கண்டுருண் டண்டர்விண் டோடாமல்
வேறொட்ட காவலனே. (52)

காவிக் கமலக் கழலுடன்
சேர்த்தெனைக் காத்தருளாய்
தூவிக் குலமயில் வாகன
னே துணை யேதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம்
பிலாத தனிக்கொடிபோற்
றாவித் தனிமனந் தள்ளாடி
வாடிப் பதைக்கின்றதே. (53)

## தரிசனப் பதிகம்

ஓலையுந் தூதருங் கண்டுதிண்
டாட லொழித்தெனக்குக்
காலையு மாலையு முன்னிற்கு
மேகந்த வேண்மருங்கிற்
சேலையுங் கட்டிய சீராவுங்
கையிற் சிவந்தசெச்சை
மாலையுஞ் சேவற் பதாகையுந்
தோகையும் வாகையுமே. (54)

மாலோன் மருகனை மன்றாடி
மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான
தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோ
டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில
னேயந்த நான்முகனே. (55)

## தன்னநுபவங் கூறினது

பேற்றைத் தவஞ்சற்று மில்லாத
வென்னைப்ர பஞ்சமென்னுஞ்
சேற்றைக் கழிய வழிவிட்ட
வாசெஞ் சடாடவிமே
லாற்றைப் பணியை யிதழியைத்
தும்பையை யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான்
குமாரன்க்ரு பாகரனே. (56)

ஒளியில் விளைந்த வுயர்ஞான
பூதரத் துச்சியின்மே
லளியில் விளைந்ததொ ரானந்தத்
தேனை யநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப்
பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வாமுக
மாறுடைத் தேசிகனே, (57)

தேனென்று பாகென் றுவமிக்கொணு
மொழித் தெய்வவள்ளி
கோனன் றெனக்குப தேசித்த
தொன்றுண்டு கூறவற்றே
வானன்று காலன்று தீயன்று
நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன் றசரீரி
யன்று சரீரியன்றே. (58)

சொல்லுகைக் கில்லையென் றெல்லா
மிழந்துசும் மாவிருக்கு
மெல்லையுட் செல்ல வெனைவிட்ட
வாவிகல் வேலனல்ல
கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியைக்
கல்வரை கொவ்வைச்செவ்வாய்
வல்லியைப் புல்கின்ற மால்வரைத்
தோளண்ணல் வல்லபமே. (59)

தாவடி யோட்டு மயிலிலுந்
தேவர் தலையிலுமென்
பாவடி யேட்டிலும் பட்டதன்
றோபடி மாவலிபான்
மூவடி கேட்டன்று மூதண்ட
கூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமாண்
மருகன்றன் சிற்றடியே. (60)

கடத்திற் குறத்தி பிரானரு
ளாற்கலங் காதசித்தத்
திடத்திற் புணையென யான்கடந்
தேன்சித்ர மாதரல்குற்
படத்திற் கழுத்திற் பழுத்தசெவ்
வாயிற் பணையிலுந்தித்
தடத்திற் றனத்திற் கிடக்கும்வெங்
காம சமுத்திரமே. (61)

கின்னங் குறித்தடி யேன்செவி
நீயன்று கேட்கச்சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கி
விட்டது கோடுகுழல்
சின்னங் குறிக்கக் குறிஞ்சிக்
கிழவர் சிறுமிதனை
முன்னங் குறிச்சியிற் சென்றுகல்
யாண முயன்றவனே. (68)

நீலச் சிகண்டியி லேறும்
பிரானெந்த நேரத்திலுங்
கோலக் குறத்தி யுடன்வரு
வான்குரு நாதன்சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி
வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார்மரிப்
பார்வெறுங் கர்மிகளே. (69

வேலே விளங்குகை யான்செய்ய
தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளவிங்ஙன் காண்பதல்
லான்மன வாக்குச்செய
லாலே யடைதற் கரிதா
யருவுரு வாகியொன்று
போலே யிருக்கும் பொருளையெவ்
வாறு புகல்வதுவே. (70)

பத்தித் திருமுக மாறுடன்
பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண்
டேன்செயன் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப்
பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர
மானந்த சாகரத்தே (71)

வரையற் றவுணர் சிரமற்று
வாரிதி வற்றச்செற்ற
புரையற்ற வேலவன் போதித்
தவாபஞ்ச பூதமுமற்
றுரையற் றுணர்வற் றுடலற்
றுயிரற் றுபாயமற்றுக்
கரையற் றிருளற் றெனதற்
றிருக்குமக் காட்சியதே. (72)

போக்கும் வரவு மிரவும்
பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில்
லாதொன்று வந்துவந்து
தாக்கு மனோலயந் தானே
தருமெனைத் தன்வசத்தே
ஆக்கு மறுமுக வாசொல்
லொணாதிந்த வானந்தமே. (73)

## பிரமனை வெருட்டல்

பங்கே ருகனெனைப் பட்டோ
லையிலிடப் பண்டுதளை
தங்காலி லிட்ட தறிந்திலை
யோதனி வேலெடுத்துப்
பொங்கோத வாய்விடப் பொன்னஞ்
சிலம்பு புலம்பவரு
மெங்கோ னறியி னினிநான்
முகனுக் கிருவிலங்கே (74)

## யமனை வெருட்டல்—காலற் கடத்தல்

மரணப்ர மாத நமக்கில்லை
யாமென்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலுமுண்
டேகிண் கிணிமுகுள
சரணப்ர தாப சசிதேவி
மங்கல்ய தந்துரக்ஷா
பரணக்ரு பாகர ஞானா
கரசுர பாஸ்கரனே. (75)

தண்டா யுதமுந் திரிசூல
மும்விழத் தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு
வேன்செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியவென் னவிரோத
ஞானச் சுடர்வடி வாள்
கண்டா யடாவந்த காவந்து
பார்சற்றென் கைக்கெட்டவே (76)

பட்டிக் கடாவில் வருமந்த
 காலனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாது
 விடேன்வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெரு
 மாடிரு முன்புநின்றேன
கட்டிப் புறப்பட டாசத்தி
 வாளென்றன் கையதுவே (77)

தந்தைக்கு முன்னந் தனிஞான
 வாளொன்று சாதித்தருள்
கந்தச் சுவாமி யெனைத்தேற்
 றியபின்னர்க் காலன்வெம்பி
வந்திப் பொழுதென்னை யென்செயலாகு
 சத்திவா ளொன்றினாற்
சிந்தத் துணிப்பன் றணிப்பருங்
 கோபத்ரி சூலந்தையே. (78)

தாரா கணமெனுந் தாய்மா
 ரறுவர் தருமுலைப்பா
லாரா தமைமுலைப் பாலுண்ட
 பால னரையிற் கட்டுஞ்
சீராவுங் கையிற் சிறுவாளும்
 வேலுமென் சிந்தையவே
வாரா தகலந்த காலந்த
 போதுயிர் வாங்குவனே. (79)

வேலா யுதன்சங்கு சக்ரா
யுதன்விரிஞ் சன்னறியாச
சூலா யுதன்றந்த கந்த
சுவாமி சுடர்க்குடுமிக்
காலா யுதக்கொடி யோனரு
ளாய கவசமுண்டென்
பாலா யுதம்வரு மோயம
னோடு பகைக்கினுமே (80)

குமரா சரணஞ் சரணமென்
றண்டர் குழாந்துதிக்கு
மமரா வதியிற் பெருமா
டிருமுக மாறுங்கண்ட
குமராகி வைகுந் தனிபான
ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு
வந்தினி யென்செயுமே. (81)

## உலகுக் குபதேசம்

அழித்துப் பிறக்கவொட் டாவயில்
வேலன் கவியையன்பா
லெழுத்துப் பிழையறக் கற்கின்றி
லீரெரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங்
கூற்றன் விடுங்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன்
றோகவி கற்கின்றதே. (83)

நடுங்கோண் மனத்தை விடுங்கோள்
வெகுளியைத் தானமென்று
மிடுங்கோ ளிருந்த படியிருங்
கோளெழு பாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந்
திறக்கத் துளைக்கவைவேல்
விடுங்கோ னருள்வந்து தானே
யுமக்கு வெளிப்படுமே. (83)

வையிற் கதிர்வடி வேலோனை
வாழ்த்தி வறிஞர்க்கென்று
நொய்யிற் பிளவள வேனும்
பகிர்மின்க ளுங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க வுதவா
வுடம்பின் வெறுநிழல்போற்
கையிற் பொருளு முதவாது
காணுங் கடைவழிக்கே (84)

கோழிக் கொடிய னடிபணி
யாமற் குவலயத்தே
வாழக் கருது மதியிலி
காளுங்கள் வல்வினைநோ
யூழிற் பெருவலி யுண்ணவொட்
டாதுங்க ளத்தமெல்லா
மாழப் புதைத்துவைத் தால்வரு
மோதும் மடிப்பிறகே. (85)

மலையாறு கூறெழ வேல்வாங்கி
னானை வணங்கியன்பி
னிலையான மாதவஞ் செய்குமி
னோநும்மை நேடிவருந்
தொலையா வழிக்குப் பொதிசோறு
முற்ற துணையுங்கண்டீர்
இலையா யினும்வெந்த தேதா
யினும்பகிர்ந் தேற்றவர்க்கே. (86)

வேடிச்சி கொங்கை விரும்புங்
குமரனை மெய்யன்பினாற்
பாடிக் கசிந்துள்ள போதே
கொடாதவர் பாதகத்தாற்
றேடிப் புதைத்துத் திருட்டிற்
கொடுத்துத் திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை
வீணுக்கு மாய்ப்பவரே. (87)

ஆங்கா ரமுமடங் காரொடுங்
கார்பர மானந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு
மறார்தினைப் போதளவு
மோங்காரத் துள்ளொளிக் குள்ளே
முருக னுருவங்கண்டு
தூங்கார் தொழும்புசெய் யாரென்செய்
வார்யம தூதருக்கே. (88)

கிழியும் படியடற் குன்றெறிந்
தோன்கவி கேட்டுருகி
இழியுங் கவிகற் றிடாதிருப்
பீரெரி வாய்நரகக்
குழியுந் துயரும் விடாய்ப்படக்
கூற்றுவ னூர்க்குச் செல்லும்
வழியுந் துயரும் பகரீர்
பகரீர் மறந்தவர்க்கே. (89)

பொருபிடி யுங்களி றும்விளை
யாடும் புனச்சிறுமான்
றருபிடி காவல சண்முக
வாவெனச் சாற்றிநித்த
மிருபிடி சோறுகொண் டிட்டுண்
டிருவினை யோமிறந்தா
லொருபிடி சாம்பருங் காணாது
மாய வுடம்பிதுவே. (90)

பொங்கார வேலையில் வேலைவிட்
டோனருள் போலுதவ
எங்கா யினும்வரு மேற்பவர்க்
கிட்ட திடாமல்வைத்த
வங்கா ரமுமுங்கள் சிங்கார
வீடு மடந்தையருஞ்
சங்காத மோகெடு வீருயிர்
போமத் தனிவழிக்கே. (91)

நீர்க்கு மிழிக்கு நிகரென்பர்
யாக்கைநில் லாதுசெல்வம்
பார்க்கு மிடத்தந்த மின்போலு
மென்பர் பசித்துவந்தே
ஏற்கு மவர்க்கிட வென்னினெங்
கேனு மெழுந்திருப்பார்
வேற்கு மரற்கன் பிலாதவர்
ஞான மிகவுநன்றே. (92)

சாடுஞ் சமரத் தனிவேன்
முருகன் சரணத்திலே
ஓடுங் கருத்தை யிருத்தவல்
லார்க்குகம் போய்ச்சகம்போய்ப்
பாடுங் கவுரி பவுரிகொண்
டாடப் பசுபதிநின்
றாடும் பொழுது பரமா
யிருக்கு மதீதத்திலே. (93)

துருத்தி யெனும்படி கும்பித்து
வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி யுடம்பை யொறுக்கிலென்
னாஞ்சிவ யோகமெனுங்
குருத்தை யறிந்து முகமா
றுடைக்குரு நாதன்சொன்ன
கருத்தை மனத்தி லிருத்துங்கண்
டீர்முத்தி கைகண்டதே. (94)

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே. (95)

அராப்புனை வேணியன் சேயருள்
வேண்டு மவிழ்ந்தவன்பாற்
குராப்புனை தண்டையந் தாடொழல்
வேண்டுங் கொடியவைவர்
பராக்கறல் வேண்டு மனமும்
பதைப்பறல் வேண்டுமென்று
லிராப்பக லற்ற விடத்தே
யிருக்கை யெளிதல்லவே. (96)

கூர்கொண்ட வேலனைப் போற்றுமி
லேற்றங்கொண் டாடுவிர்காள்
போர்கொண்ட கால னுமைக்கொண்டு
போமன்று பூண்பனவுந்
தார்கொண்ட மாதரு மாளிகை
யும்பணச் சாளிகையு
மார்கொண்டு போவரை யோகெடு
வீர் நும மறிவின்மையே. (97)

காட்டிற் குறத்தி பிரான்பதத்
தேகருத் தைப்புகட்டின்
வீட்டிற் புகுத மிகவெளி
தேவிழி நாசிவைத்து
மூட்டிக் கபாலமூ லாதார
நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கு மோடாமற்
சாதிக்கும் யோகிகளே. (98)

கருமான் மருகனைச் செம்மான்
மகளைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக்
கோளனை வானமுய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வே
லனைக்கன்னிப் பூகமுடன்
றருமா மருவுசெங் கோடனை
வாழ்த்துகை சாலநன்றே. (99)

யான்றா னெனுஞ்சொல் லிரண்டுங்
கெட்டாலன்றி யாவருக்குந்
தோன்றாது சத்தியந் தொல்லைப்
பெருநிலஞ் சூகரமாய்க்
கீன்றான் மருகன் முருகன்க்ரு
பாகரன் கேள்வியினாற்
சான்றாரு மற்ற தனிவெளிக்
கேவந்து சந்திப்பதே. (100)

## நூற்பயன்

சலங்கா ணும் வேந்தர் தமக்குமஞ்
சார்யமன் சண்டைக்கஞ்சார்
துலங்கா நரகக் குழியணு
கார்துட்ட நோயணுகார்
கலங்கார் புலிக்குங் கரடிக்கும்
யானைக்குங் கந்தனன் னூ
லலங்கார நூற்று ளொருகவி
தான்கற் றறிந்தவரே.

கந்தரலங்காரம்

முற்றிற்று.

## சில பதிப்புக்களில் மிகுதியாகக் காணப்படுவன.

திருவடி யுந்தண்டை யுஞ்சிலம் புஞ்சிலம் பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந் தடம்புய மாறிரண்டு
மருவடி வான வதனங்க ளாறு மலர்க்கண்களுங்
குருவடி வாய்வந்தென் னுள்ளங் குளிரக் குதிகொண்டவே.

இராப்பக லற்ற விடங்காட்டி யானிருந் தேதுதிக்கக்
குராப்புனை தண்டையந் தாளரு ளாய்கரி கூப்பிட்டநாள்
கராப்படக் கொன்றக் கரிபோற்ற நின்ற கடவுண்மெச்சும்
பராக்ரம வேல நிருதசங் கார பயங்கரனே.

செங்கே ழடுத்த சிவனடி வேலுந் திருமுகமும்
பங்கே நிரைத்தநற பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளஞ் சொரியுஞ்செங் கோடைக் குமரனென
எங்கே நினைப்பினு மங்கேயென் முன்வந் தெதிர்நிற்பனே.

ஆவிக்கு மோசம் வருமா றறிந்துன் னருட்பதங்கள்
சேவிக்க வென்று நினைக்கின்றி லேன்வினை தீர்த்தருளாய்
வாவித் தடவயல் சூழுந் திருத்தணி மாமலைவாழ்
சேவற் கொடியுடை யானே யமர சிகாமணியே.

கொள்ளித் தலையி லெறும்பது போலக் குலையுமென்ற
னுள்ளத் துயரை யொழித்தரு ளாயொரு கோடிமுத்தந்
தெள்ளிக் கொழிக்குங் கடற்செந்தின் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவ னேமயி லேறிய மாணிக்கமே.

சூலம் பிடித்தெம பாசஞ் சுழற்றித் தொடர்ந்துவருங்
காலன் றனக்கொரு காலுமஞ் சேன்கடன் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான் குமார னறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே நமக்கொரு மெய்த்துணையே.

# கந்தரநுபூதி

காப்பு

நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்.

[பணி செய்ய]

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடும் தனியா னைசகோ தரனே. (1)

[யான்-எனது- என்பது நீங்க]

உல்லாச நிரா குலயோ கிதச்
சல்லா பவிநோ தனுநீ யலையோ
எல்லா மறவென் னையிழந் தநலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே. (2)

[பேரின்பப் பொருள்]

வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோ தயமோ நவினான் மறையோ
யானோ மனமோ வெனையாண் டவிடந்
தானோ பொருளா வதுசண் முகனே. (3)

[பாசம் அற]

வளைபட் டகைமா தொடுமக் களெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே. (4)

[மூவாசையின் பெருவலி]

மகமா யைகளைந் திடவல்ல பிரான்
முகமா றுமொழிந் துமொழிந் திலனே
அகமா டைமடந் தையரென் றயருஞ்
சகமா யையுணின் றுதயங் குவதே. (5)

[நெஞ்சம் திருக்கோயிலாக]

திணியா னமனோ சிலைமீ தனதாள்
அணியா ரரவிந் தமரும் புமதோ
பணியா வெனவள் ளிபதம் பணியும்
தணியா வதிமோ கதயா பரனே. (6)

[கதி பெற]

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவே லிறைதா ணினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே. (7)

[மெய்ப்பொருட் பேறு]

அமரும் பதிகே ளகமா மெனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள்பே சியவா
குமரன் கிரிரா சகுமா ரிமகன்
சமரம் பொருதா னவநா சகனே. (8)

[பேன்னுசையற]

மட்டூர் குழன்மங் கையர்மை யல்வலைப்
பட்டூ சல்படும் பரிசென் றொழிவேன்
தட்டூ டறவேல் சயிலத் தெறியும்
நிட்டூ ரநிரா குலநிர்ப் பயனே. (9)

[சாம்போது தரிசனம்பேற]

கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார் பவலா ரிதலா ரியெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே. (10)

[மேய்ப்போருட்பேறு]

கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவித்
தியாகா சுரலோ கசிகா மணியே. (11)

[பேரின்ப நிலை]

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றமறிந் திலனே. (12)

[இறைவன் திருநிலை]

முருகன் றனிவேன் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே (13)

[அவா அற]

கைவாய் கதிர்வேன் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியாம்
ஐவாய் வழிசெல் லுமவா வினையே (14)

[முருகா என உருக]

முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகுஞ் செயறந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும புவியும் பரவுங்
குருபுங் கவவெண் குணபஞ் சரனே. (15)

[பேராசை நீங்க]

பேரா சையெனும் பிணியிற் பிணிபட
டோரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோ கதுரந் தரனே. (16)

[துதித்துய்ய]

யாமோ தியகல் வியுமெம் மறிவுந்
தாமே பெறவே லவர்தந் ததனாற்
பூமேன் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே னடவீர் நடவீ ரினியே. (17)

[தோத்திரம்]

உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா வநகா வபயா வமரா
பதிகா வலசூ ரபயங் கரனே. (18)

[மிடியின் கொடுமை]

வடிவுந் தனமும் மனமுங் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வே லரசே
மிடியென் றொருபா விவெளிப் படினே. (19)

[இறைவன் கருணை]

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா வுபதே சமுணர்த் தியவா
விரிதா ரணவிக் ரமவே ளிமையோர்
புரிதா ரகநா கபுரந் தரனே. (20)

[கழல் பெற]

கருதா மறவா நெறிகா ணவெனக்
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூ ரவிபா டணனே. (21)

[தவப் பேறு]

காளைக் குமரே சனெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே. (22)

[திருவடித் தியானச் சிறப்பு]

அடியைக் குறியா தறியா மையினான்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேள் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே. (23)

[அருள் சேர]

கூர்வேல் விழிமங் கையர்கொங் கையிலே
சேர்வே னருள்சே ரவுமெண் ணுமதோ
சூர்வே ரொடுகுன் றதொளைத்த நெடும்
போர்வே லபுரந் தரபூ பதியே. (24)

[வாழ்வாவது மாயம்]

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்
தையோ வடியே னலையத் தகுமோ
கையோ வயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலே றியசே வகனே. (25)

[அருள் பெற]

ஆதா ரமிலே னருளைப் பெறவே
நீதா னொருசற் றுநினைந் திலையே
வேதா கமஞா னவினோ தமனோ
தீதா சுரலோ கசிகா மணியே. (26)

[வாழ்வு நிலையாமை]

மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயிலே றியவா னவனே. (27)

[பேரின்பப் பொருள்]

ஆனா வமுதே யயில்வே லரசே
ஞான கரனே நவிலத் தகுமோ
யானா கியவென் னைவிழுங் கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே. (28)

[மாயை விலக]

இல்லே யெனுமா யையிலிட் டனைநீ
பொல்லே னறியா மைபொறுத் திலையே
மல்லே புரிபன் னிருவா குவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே. (29)

[பேரின்பப் பொருள்]

செவ்வா னுருவிற் றிகழ்வே லவனன்
றொவ்வா ததென வுணர்வித் ததுதான்
அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே. (30)

[முறையீடு]

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யெனவென் னைவிதித் தனையே
தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே. (31)

[அலைதல் ஒழிய]

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரிவே டர்குலப் பிடிதோய்
மலையே மலைகூ றிடுவா கையனே. (32)

[பாசம் விலக]

சிந்தா குலவில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென் றுவிடப் பெறுவேன்
மந்தா கினிதந் தவரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே. (33)

[பெண்ணாசை யற]

சிங்கா ரமடந் தையர்தீ நெறிபோய்
மங்கா மலெனக் குவரந் தருவாய்
சங்க்ரா மசிகா வலசண் முகனே
கங்கா நதிபா லக்ருபா கரனே. (34)

[கதி காண]

விதிகா ணுமுடம் பைவிடா வினையேன்
கதிகா ணமலர்க் கழலென் றருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்
துதியா விரதா சுரபூ பதியே. (35)

[மந்த்ரோபதேசம்]

நாதா குமரா நமவென் றரனார்
ஓதா யெனவோ தியதெப் பொருடான்
வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே. (36)

[அகந்தை யற]

கிரிவாய் விடுவிக் ரமவே லிறையோன்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
அரிவா யடியோ டுமகந் தையையே. (37)

[இறைவன் எளிமைத்திறம்]

ஆதா ளியையொன் றறியே னையறத்
தீதா ளியையாண் டதுசெப் புமதோ
கூதா ளகிரா தகுலிக் கிறைவா
வேதா ளகணம் புகழ்வே லவனே. (38)

[பிறவி யற]

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவே டணையென் றுமுடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவசங் கரதே சிகனே. (39)

[வேல் மறவேன்]

வினையோ டவிடுங் கதிர்வேல் மறவேன்
மனையோ டுதியங் கிமயங் கிடவோ
சுனையோ டருவித் துறையோ டுபசுந்
தினையோ டிதணோ டுதிரிந் தவனே. (40)

[இறவி யற]

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே. (41)

[வேல் ஸ்மரணை]

குறியைக் குறியா துகுறித் தறியும்
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலும்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே. (42)

[மௌன நிலை]

தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா வநுபூ திபிறந் ததுவே. (43)

[முருகன் அருட்டிறம்]

சாடுந் தனிவேல் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடுஞ் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே. (44)

[மெய்ப்பொருள் பெற]

கரவா கியகல் வியுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோ கதயா பரனே. (45)

[கவலை நீங்க]

எந்தா யுமெனக் கருடந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே. (46)

[அதீத நிலைபெற]

ஆறா றையுநீத் ததன்மே னிலையைப்
பேறா வடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா வுலகங் குளிர்வித் தவனே. (47)

[அறிவோடு பிரிவற இறைவன் நிற்றல்]

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும்வே லவனே. (48)

[உபதேசப் பெருமை]

தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் மொருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையுங் க்ருபைசூழ் சுடரே. (49)

[நற்கதி நிலைக்க]

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திரஞா னசுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே. (50)

[குருதரிசனம்]

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே. (51)

கந்த ரநுபூதி முற்றிற்று.

# கந்த ரலங்காரம்

## பாட்டு முதற்குறிப்பகராதி


| பாட்டு முதற்குறிப்பு | பக்கம் | பாட்டு முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 1. அடலருணை | 1 | 33. சிகராத்ரி | 16 |
| 2. ஆராப்புனை | 33 | 34. சிந்திக்கிலே | 10 |
| 3. அழித்துப்பிற | 28 | 35. சுழித்தோடு | 7 |
| 4. ஆங்காரமு | 30 | 36. சூரிற்கிரியிற் | 7 |
| 5. ஆலுக்கணி | 5 | 37. சேந்தனைக்கந் | 33 |
| 6. இடுதலைச்சற் | 23 | 38. சேல்பட்டழி | 22 |
| 7. உதித்தாங் | 15 | 39. சேல்வாங்கு | 8 |
| 8. ஒரு பூதரு | 22 | 40. சேவிற்றிகழ் | 6 |
| 9. ஒருவரைப் பங்கி | 2 | 41. சொல்லுகை | 21 |
| 10. ஒளியில்விளை | 20 | 42. சொன்னகிரௌ | 23 |
| 11. ஓரவொட்டா | 9 | 43. தகட்டிற் | 18 |
| 12. ஓலையுந்தூத | 19 | 44. தடக்கொற்ற | 5 |
| 13. கடத்திற்குற | 21 | 45. தடுங்கோண் | 29 |
| 14. கண்டுண்ட | 12 | 46. தண்டாயுதமுந் | 26 |
| 15. கதிதனை | 12 | 47 தந்தைக்குமுன் | 27 |
| 16 கருமான் | 34 | 48. தாராகண | 27 |
| 17. கவியாற்கட | 9 | 49. தாவடியோட்டு | 21 |
| 18. காட்டிற்குற | 34 | 50. திருந்தப்புவன | 1 |
| 19. காவிக்கமல | 19 | 51. துருத்தியெனும் | 32 |
| 20. கிழியும்படி | 31 | 52. தெய்வத்திரு | 13 |
| 21. கிளைத்துப்புற | 14 | 53. தெள்ளியவேன | 8 |
| 22. கின்னங்குறி | 24 | 54 தேங்கியவண்ட | 3 |
| 23. குசைநெகிழா | 5 | 55. தேரணியிட்டு | 4 |
| 24. குப்பாசவாழ் | 13 | 56. தேனென்று | 20 |
| 25. குமாரசரண | 28 | 57. தொண்டர்கள் | 18 |
| 26. கூர்கொண்ட | 33 | 58. தோலாற்சுவர் | 11 |
| 27. கோடாதவேத | 11 | 59. நாளென்செயு | 2 |
| 28. கோழிக்கொடி | 29 | 60. நிணங்காட்டுங் | 9 |
| 29. சலங்காணும் | 35 | 61. நீயானஞான | 16 |
| 30. சளத்திற்பிணி | 13 | 62. நீர்க்குமிழி | 32 |
| 31. சாகைக்குமீண்டு | 10 | 63. நீலச்சிகண்டி | 24 |
| 32. சாடுஞ்சமர | 32 | 64. நெற்றுப் பசுங் | 3 |

பக்கம்
65. பங்கேருகனெனை 26
66 பட்டிக்கடா 27
67 படிக்கின்றிலை 8
68 படிக்குந்திருப்புகழ் 16
69 படைபட்ட 6
70. பத்தித்திருமுக 25
71 பத்தித்துறை 15
72. பந்தாடிமங் 17
73 பாதித்திருவுரு 22
74 பாலென்பது 7
75 பாலேயனைய 15
76. புத்தியை வாங்கி 10
77. பெருமைப்பைம் 23
78 பெறுதற்கரிய 11
79 பேற்றைத்தவ 20
80. பொக்கக்குடிலிற் 14
81 பொங்காரவேலை 31
82 பொட்டாகவெற் 14
83 பொருப்பிடியுங் 31
பக்கம்
84. போக்கும்வரவு 25
85 மணங்கமழுஞ்சி 4
86 மரணப்ரமாத 26
87. மலையாறு 30
88. மாகத்தைமுட்டி 17
89. மாலோன்மருக 19
90. முடியாப்பிறவி 4
91. மைவருங்கண்ட 12
92. மொய்தாரணி 2
93. யான்றானெனு 34
94. வணங்கித்துதி 18
95. வரையற்ற 25
96 விழிக்குத்துணை 3
97 வெட்டுங்கடா 17
98 வேடிச்சிகொங் 30
99. வேதாகமசித்ர 6
100. வேலாயுதன் 28
101 வேலேவிளங்கு 24
102 வையிற்கதிர்வடி 29

## கந்தரநுபூதி

பக்கம்
1 அடியைக்குறியா 41
2 அமரும்பதி 38
3. அரிதாகிய 41
4. அறிவொன்றற 46
5 ஆடும்பரிவே 37
6. ஆதாரமிலேன் 42
7 ஆதாளியை 44
8 ஆறாறையுநீத் 46
9 ஆனாவமுதே 42
10 இல்லேயெனு 43
11. உதியாமரியா 40
12 உருவாயரு 47
பக்கம்
13 உல்லாசநிரா 37
14 எந்தாயுமென 46
15. கரவாகிய 46
16 கருதா மறவா 41
17 கலையே பதறி 43
18. கார்மாமிசை 39
19. காளைக்கும 41
20. கிரிவாய்விடு 44
21 குறியைக்குறியா 45
22. கூகாவென 39
23. கூர்வேல்விழி 42
24 கெடுவாய்மனனே 38

| | | பக்கம் | | | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 25. | கைவாய்கதிர் | 40 | 39 | மகமாயை | 38 |
| 26. | சாகாதெனை | 45 | 40. | மட்டூர்குழன் | 39 |
| 27. | சாடுந்தனிவேன் | 46 | 41. | மதிகெட்ட | 47 |
| 28. | சிங்காரமட | 44 | 42. | மாவேழ்சனன | 45 |
| 29. | சிந்தாகுலவில் | 43 | 43. | மின்னேநிகர் | 42 |
| 30. | செம்மான்மகளை | 39 | 44. | முருகன்குமரன் | 40 |
| 31. | செவ்வானுரு | 43 | 45. | முருகன்தனி | 39 |
| 32. | தன்னந்தனி | 47 | 46. | மெய்யேயென | 42 |
| 33. | திணியானமனோ | 38 | 47. | யாமோதிய | 40 |
| 34. | தூசாமணியுந் | 45 | 48. | வடிவுந்தனமு | 41 |
| 35. | நாதாகுமரா | 44 | 49. | வளைபட்ட | 38 |
| 36. | நெஞ்சக்கன | 37 | 50. | வானோபுனல் | 37 |
| 37. | பாழ்வாழ்வெனு | 43 | 51 | விதிகாணுமு | 44 |
| 38. | போராசையெனு | 40 | 52. | வினையோட | 45 |


---

# ஷண்முக விஜயம்

(திருப்புகழ் விருத்தியுரை ஆசிரியர்
ஸ்ரீமான் பி. எஸ். சுப்பிரமணியம், எம். ஏ., அவர்கள் இயற்றியது)

இந்நூல், ஷண்முகக்கடவுளது திவ்விய சரித்திரமாகிய விரிந்த கந்தபுராணத்தை யாவரும் எளிதில் படித்துத் தெரிந்து கொள்ளவேண்டுமென்ற நோக்கத்துடனும் அவர்கள் அத்திவ்விய சரித்திரத்தைத் தினந்தோறும் பாராயணஞ்செய்து முருகப்பெருமானது அருளைப்பெற்று சகல சௌபாக்கியங்களையும் அடைந்து நல்வாழ்வு வாழ்வதற்கு எளிதான வழி காட்டவேண்டுமென்ற நோக்கத்துடனும எழுதப்பட்டுள்ளது. இதில் பல அழகிய படங்களும் சேர்க்கப்பட்டிருக்கிறது. விலை அணா 12

---

அல்லயன்ஸ் கம்பேனி, மயிலாப்பூர், சென்னை.

# எம்மிடம் கிடைக்கும் இதர நூல்கள்

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| திருப்புகழ் இரத்தினமாலை | 0 | 3 | 0 |
| ஸ்ரீ பால ராமாயணம், அழகிய படங்களுடன் | 0 | 8 | 0 |
| அக்பர் சக்கரவர்த்தி | 0 | 12 | 0 |
| அம்பலவாணன் அல்லது நாராயண கைதி, முதற் பாகம் | 1 | 8 | 0 |
| ஷை இரண்டாம் பாகம், (4 படங்களுடன்) | 1 | 8 | 0 |
| ஷண்முக சுந்தரர் அல்லது காதல் திறம் | 2 | 0 | 0 |
| தனபாக்கியம் அல்லது அதிருஷ்டவதியின் திவ்ய சரித்திரம், (படங்களுடன்) | 2 | 0 | 0 |
| விக்ரமசிங்கன் கோட்டை மர்மம் அல்லது கற்பின் வெற்றி, (படங்களுடன்) | 1 | 0 | 0 |
| தஞ்சை நாயகர் தாழ்வு அல்லது விதியின் வலிமை | 1 | 0 | 0 |
| சிவகுமாரன் அல்லது கொலைஞன் யார்? | 1 | 0 | 0 |
| மோகனாங்கி அல்லது காணாமற்போன பெண்மணி | 1 | 0 | 0 |
| பஞ்சரத்தினம், 7-ம் பதிப்பு | 0 | 12 | 0 |
| மரகதவல்லி, 6-ம் பதிப்பு | 0 | 12 | 0 |
| ஸ்ரீமத் பாரத ஸாரம் — 2-ம் பதிப்பு | 1 | 2 | 0 |
| ஸ்ரீமத் ராமாயண ஸாரம் | 1 | 0 | 0 |
| ஸ்ரீமத் ராமாயண வினாவிடை 7 காண்டங்களும் | 1 | 8 | 0 |
| ஜகஜ்ஜோதி சரித்திர சம்பந்தமான நாவல் | 0 | 10 | 0 |
| ஸ்ரீமத் பாகவத ஸாரம் — 2-ம் பதிப்பு | 1 | 0 | 0 |
| பீமலா அல்லது கிழான மகள் | 0 | 8 | 0 |
| பரதன் அல்லது பாரதரு சிகாமணி | 0 | 12 | 0 |
| ஆரியமத உபாக்கியானம் 1-ம் பாகம் 17-ம் பதிப்பு | 0 | 8 | 0 |
| ஷை இரண்டாம் பாகம், 10-ம் பதிப்பு | 0 | 10 | 0 |
| திருமூலர் திருமந்திரம், புதிய பதிப்பு | 2 | 4 | 0 |
| மனுநீதிச் சோழன், புதிய பதிப்பு | 0 | 8 | 0 |
| பாண்டவ சரித்திரம் அல்லது தருமமே ஜயம் | 2 | 4 | 0 |
| குண்டலகேசி | 0 | 5 | 0 |
| பீஷ்ம சரித்திரம் | 0 | 6 | 0 |
| இயற்கை அற்புதங்கள், (3-ம் பதிப்பு) | 0 | 10 | 0 |
| குஹன் சரித்திரம் | 0 | 4 | 0 |
| முரளீதரன் | 0 | 10 | 0 |
| வியாஸ விதானம் | 0 | 12 | 0 |
| ஐரோப்பிய மஹா யுத்தம் | 1 | 4 | 0 |
| ஸ்திரிரத்னம் — ஓர் அற்புத நாவல் | 1 | 4 | 0 |
| ருக்மிணி அல்லது பதி பக்தி | 0 | 8 | 0 |

**விலாசம் :— அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.**

உ

வேலுமயிலுந் துணை

# திருப்புகழ்ப் :: :: பாராயணத் திருமுறை

"திருப்புகழ்ப் பாராயணத் திருமுறை" என்னும் இந்நூல் இத்தமிழ் நாடெங்கும் திருப்புகழ் என்னும் தேனை, மாரியாகப் பொழிபவரும், திருப்புகழடியார் திருவடிச் சென்னியார் என்னுங் காரணப் பெயர் வாய்ந்தவருமாகிய பிரம்மஸ்ரீ வள்ளிமலை ஸ்வாமி சச்சிதாநந்தா அவர்களால் தொகுக்கப்பட்ட தொன்றாகும். திருப்புகழ்த் தொகுப்புக்கள் பலவுளவே, இத்தொகுப்பு ஏனோ எனின் திருப்புகழ் என்னும் அருட் பிரபந்தமானது ஸகல ஜீவர்களுக்கும் இம்மை மறுமை வீடுகளைத் தரும் கற்பக விருக்ஷமாகும். அதில் ஒவ்வொரு சந்தப்பாவும் ஒவ்வொரு மஹா மந்திரமாகும். ஆதலாற்றான் திருப்புகழ் படிப்பதை "பாராயணம்" என்று பெரியோர் வழங்குகின்றார்கள். இப்பாராயணத்தினால் வீட்டின்ப மொன்றினையே நாடும் உத்தமாதிகாரிகளுக்கு இம்மைச் சுக முண்டாவதோடு, பலகோடி சமயப் பொதுக் கடவுளாகிய முருகப் பெருமானது அருளும், தரிசனமும், ஞானமும், அனுபவமும் உண்டாகும். இம்மை, மறுமைகளை நாடும் மத்திய அதிகாரிகளுக்கு இகத்தில் சகல செல்வ யோக மிக்க பெரு வாழ்வும் பரத்தில் வானவர் போற்றும் துறக்க வின்பமும் உண்டாகுமென்பது திண்ணம். இம்மைப் பயனொன்றையே நாடும் அதம அதிகாரிகளுக்குக் கல்விப் பெருக்கும், நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் இன்னவை பலவும் ஏற்படும். இதில் அணுவளவும் ஐயமின்று

இந்நூல் திருப்புகழ்ப் பாராயணம் செய்யும் திருப்புகழடியார்க்கும், திருப்புகழ் சங்கங்களுக்கும் மிகவும் இன்றியமையாததாகும். இந்நூலில் திருப்புகழேயன்றி ஸ்ரீ அருணகிரிநாதரின் பிரபந்தங்களாகிய கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரநுபூதி, திருவகுப்பு முதலியவற்றினின்றும் பொருந்திய கருத்துக்களுடைய பல பாக்களும் தொகுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன. **10**-படங்களுடன் ரூ. **1.**

---

**விலாஸம்:** — அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.